# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association
(பதிவு எண்: 237/84)

**தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்**

எண்.46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005

28441286 / 28440938 / 28443601 e-mail: tngeastatecenter@gmail.com / web: www.tngea.org

மாநிலத் தலைவர்
**மு.அன்பரசு**

பொதுச் செயலாளர்
**ஆ.செல்வம்**

மாநில துணைத் தலைவர்கள்
**மொ.ஞானத்தம்பி**
**ஆ.பெரியசாமி**
**கோ.பழனியம்மாள்**
**சி.எஸ்.கிறிஸ்டோபர்**
**சி.பரமேஸ்வரி**
**மு.செல்வராணி**

மாநிலப் பொருளாளர்
**மு.பாஸ்கரன்**

துணை பொதுச்செயலாளர்கள்
**இரா.மங்களபாண்டியன்**
**என்.வெங்கடேசன்**
**மு.சீனிவாசன்**
**தெ.வாசுகி**

மாநிலச் செயலாளர்கள்
**சா.டானியல் ஜெயசிங்**
**உ.சுமதி**
**ச.ஹேமலதா**
**ஆ.அம்சராஜ்**
**சா.கோதண்டபாணி**
**அ.குபேரன்**


கடித எண்..29-1/2022 நாள்..21.03.2022

பெறுநர்

**முதல்வரின் தனிச் செயலாளர்**
தமிழ்நாடு அரசு
தலைமைச் செயலகம்
சென்னை-600009

மதிப்பிற்குரிய ஐயா,

வணக்கம்.

பொருள் : நில அளவைத் துறை - நிலுவைக் கோரிக்கைகளுக்காக போராடும் தமிழ் நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றிப்பின் மாநில நிர்வாகிகளை அழைத்துப் பேசி தீர்வு காண கோருதல் - தொடர்பாக

தமிழ் நாடு நில அளவைத் துறையில் உள்ள ஊழியர்களின் பணியை முறைப்படுத்தி பணிச் சுமையை குறைத்திடவும், ஊழியர்களின் உரிமையை பாதுகாத்திடவும் கோரி தமிழ் நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றிப்பின் சார்பில் 2022 ஜனவரி 31 முதல் அரசின் கவனத்தை ஈர்த்து கோரிக்கைகளுக்கு தீர்வு காணும் வகையில் கவன ஈர்ப்பு இயக்கங்கள் நடத்தியுள்ளனர். இரண்டு முறை இயக்குனர் நிலையில் அழைத்துப் பேசியும் பிரச்சினைகள் தீர்க்கப்படாததால் இக்கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகம் முழுவதும் வருகின்ற மார்ச் மாதம் 23ஆம் தேதி முதல் 72 மணி நேர தொடர் வேலை நிறுத்தம் செய்து அரசின் கவனத்தை ஈர்த்திட உள்ளனர் என்பதினை தங்களின் கனிவான கவனத்திற்கு கொண்டுவர விழைகின்றோம்.

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
# Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84

**தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்**

எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601




நிர்வாக ரீதியாக பேசி தீர்க்கப்பட வேண்டிய இவ்வூழியர்களின் கோரிக்கைகள் நீண்ட நாட்களாக தீர்க்கப்படாமலேயே உள்ளது. ஒரு துறை ஊழியர்களது கோரிக்கைகள் நீண்ட நாட்களாக தீர்க்கப்படாமல் அவர்களை போராட்டக் களம் நோக்கித் தள்ளுவது என்பது நிர்வாகத்திற்கும் ஊழியர்களுக்கும் உகந்தது அல்ல என்பதினை தங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆகவே தமிழ் நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றிப்பின் மாநில நிர்வாகிகள் உள்ளடங்கிய துறை ரீதியான கூட்டமர்வு நடத்தி போராடுபவர்களின் நியாயமான கோரிக்கைகள் மீது தீர்வு எட்டிட அரசுச் செயலாளருக்கு தங்களின் ஆலோசனையையும், அறிவுரையையும் வழங்கி கோரிக்கை நிறைவேற்றிடும் வகையில் உதவிட வேண்டுமாறு கனிவுள்ளம் கொண்ட தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தங்கள் நம்பிக்கையுள்ள,

**( மு. அன்பரசு )**
மாநிலத் தலைவர்
98401 – 87508

**( ஆ.செல்வம் )**
பொதுச் செயலாளர்
94439 – 30500